பக்கங்கள்:10

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 15 வியாழக்கிழமை 30.12.2021 கதிர் 55

### இது ரகசியம் அல்ல!

நாடு மிக உச்ச நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கையில், கிறிஸ்மஸ் புதுவருடக் கொண்டாட்ட விடுமுறையை ஒட்டி அமெரிக்கா பறந்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நாட்டில் நெருக்கடிகள் முற்றியமையால் பக்கம்02

# பஸ் கட்டணங்கள் 17 வீதத்தால் அதிகரிப்பு

## குறைந்தபட்ச கட்டணம் ரூ. 17 என்கிறார் இராஜாங்க அமைச்சர்

தனியார் மற்றும் இ.போ.ச. பஸ் கட்டணங்கள் 17 வீதத்தால் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாகப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.


அந்தவகையில் ஜனவரி 5ஆம் திகதி முதல் குறைந்தபட்ச பஸ் கட்டணத்தை ரூ. 14 இலிருந்து ரூ. 17 ஆக ரூ. 3 இனால் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பஸ் தொழில் துறையைக் கவனத்தில் கொண்டும் பயணிகளின் நிலையைக் கருத்தில் கொண்டும் முடியுமான அளவில் மிகக்குறைந்த கட்டணங்களின் 2






### கானமயில்நாதனுக்கு சொந்த ஊரில் இன்று அஞ்சலி நிகழ்வு

வாழ்நாள் சிரேஷ்ட பத்திரிகையாளர் அமரர் ம.வ.கானமயில்நாதனுக்கான அஞ்சலி நிகழ்வு இன்று 30 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது சொந்த ஊரான 2

# தமிழ் இளைஞர்களை பழிவாங்கும் கோட்டா

## முன்னாள் எம்.பி. சுரேஷ் குற்றச்சாட்டு



(ந.லோகதயாளன்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவர் தலைமையிலான அரசும் தமிழ் இளைஞர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

– இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டினார். 2

# டுபாய் பயணத்தை நிறுத்திய மஹிந்த



டுபாய் புறப்படுவதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட திட்டம் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 3ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் எக்ஸ்போ கண்காட்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. 2

# மஹிந்த எமக்கு வேண்டும்; அவர் ஓய்வுபெறக் கூடாது!

## ஆதரவுக் குரல் எழுப்பும் முருத்தெட்டுவே தேரர்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வுபெறக் கூடாது. அவர் தொடர்ந்தும் செயற்பாட்டு அரசியலில் இருக்க வேண்டும்.

- இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2

# அமெரிக்காவிலிருந்து இன்று நாடு திரும்புகின்றார் பஸில்!



அமெரிக்கா சென்றிருந்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இன்று நாடு திரும்பவுள்ளார்.

அமெரிக்காவிலிருந்து நேற்றிரவு கிளம்பிய அவர், டுபாய் வழியாக இன்று இலங்கை வரவுள்ளார். 2

# மேலும் 21 பேர் சாவு!

இலங்கையில் மேலும் 21 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 14 ஆண்களும், 7 பெண்களும் உள்ளடங்குகின்றனர். 2

# அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள உயர்வு ஜனவரி முதல்

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை அடுத்த மாதம் முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட சம்பளம் அவர்களுக்கு வழங்கப் 2

# ஜனவரி 9இல் இலங்கையில் களமிறங்கும் சீன அமைச்சர்



சீன வெளிவிவகார அமைச்சர் வேன் வீ எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

அவருடன் தூதுக்குழுவொன்றும் நாட்டை வந்தடையவுள்ளது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட சீன உரக் கப்பல் தொடர்பில் அண்மையில் 2

# ஜனநாயக வழியிலேயே ஆட்சி மாற்றம்

## ஜே.வி.பி. அதிரடி அறிவிப்பு



ஜனநாயக வழியிலான ஆட்சி மாற்றத்தையே ஜே.வி.பி. விரும்புகின்றது. அதனையே வலியுறுத்துகின்றது. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்களை வளைத்துபோட்டு ஆட்சியைக் கவிழ்க்கும் நடைமுறை எமக்கு பொருந்தாது.

- இவ்வாறு ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:- 2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனது அமெரிக்க விடுமுறையை வெட்டிக் குறைத்து விட்டு அவசரமாக நாடு திரும்புகின்றார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று லொஸ் ஏஞ்சல்ஸிலிருந்து புறப்பட்ட அவர், துபாய் வழியாக இன்று கொழும்பு வந்து சேருவார் என எதிர்பார்க்கப்பட்டது.

வந்ததும் முதல் விடயமாக ஜனாதிபதியின் செயலாளராக இருக்கும் பி.பீ. ஜயசுந்தரவின் இராஜினாமாக் கடிதம் தொடர்பான விடயத்தை ஜனாதிபதியுடன் நிதியமைச்சர் கையாளுவார் என ஒரு செய்தி வட்டாரம் தெரிவித்தது.

இதேசமயம், பஸிலின் வருகையோடு புதிய வருடத்தில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறும் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

அமைச்சரவை மறுசீரமைப்பின் போது –

✦ பிரதமர் பதவி பஸில் ராஜபக்ஷவுக்கு வழங்கப்படும் என்றும் –

✦ யுகதனவி வலு உற்பத்தி நிலைய சர்ச்சையை ஒட்டி அமைச்சரவைத் தீர்மானத்துக்கு மாறாக நீதிமன்றத்துக்குச் சென்றுள்ள அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, உதயன் கம்மன்பில்ல, விமல் வீரவன்ஸ ஆகியோர் அமைச்சர் பதவிகளை இழப்பர் என்றும் –

சில செய்தி வட்டாரங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டன.

ஆனால், அமைச்சரவை மாற்றம் நடந்தாலும் மேற்படி இரண்ட விடயங்களும் நடக்கா என்று அரச வட்டாரங்கள் சில அடித்துக் கூறின.

ராஜபக்ஷ தரப்புகளுக்கு ஆதரவாக நிற்கும் பௌத்த, சிங்கள தீவிர போக்குடைய தேரர்கள் சிலர் மஹிந்த ராஜபக்ஷ முற்கூட்டியே அரசியல் ஓய்வுக்குப் போவது ராஜபக்ஷ அதிகாரக் கட்டமைப்பையே ஆட்டம் காண வைத்து விடும் என்று ஜனாதிபதி கோட்டாபயவுக்கே நேரடியாக ஆலோசனை கூறியிருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

அது மாத்திரமல்ல, ராஜபக்ஷ குடும்பத்தில் மற்றொரு முக்கிய பிரமுகரிடம் இது பற்றி நேரில் கேட்டேன். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து விலகும் பேச்சுக்கோ, அரசியலில் இருந்து இப்போதைக்கு விலகும் தீர்மானத்துக்கோ இடமேயில்லை என்று மிக உறுதியாகச் சொன்னார் அவர். ஜனாதிபதி, நிதியமைச்சர் உட்பட குடும்பத்தவர்கள் அனைவரும் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் தொடர்வதை மாத்திரமல்லாமல், பிதாமகராக (God Father ஆ) அவரை முன்நிறுத்தி அரசியல் செய்வதையே நம்பியிருக்கின்றனர் எனவும் தெளிவுபடுத்தினார்.

இதேசமயம், அரசியல் செல்வாக்கு ரீதியில் பலவீனமான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமது ஆட்சிக் கூட்டமைப்பின் முக்கிய மூன்று அமைச்சர்களை பதவி இழக்கச் செய்து, அந்த மூன்று கட்சிகளின் அரசியல் ஆதரவை இழக்கத்தயாரில்லை என்று தெரிவிக்கும் கொழும்பு அரசியல் நோக்கர்கள், அந்த மூன்று அமைச்சர்களையும் பதவி இழக்கச் செய்யும் கைங்கரியத்தை அவர் தாமாகச் செய்யவே மாட்டார் என்றும் உறுதியாகக் கூறுகின்றனர்.

அமைச்சுப் பொறுப்புகள் அமைச்சர்களிடையே மாற்றப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. கொதித்துக் கொண்டு நிற்கும் சு.கவின் வாயை மூடுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு முக்கிய அமைச்சு ஒன்று வழங்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் அந்த நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

எது, எப்படி என்றாலும் பிறக்கும் புத்தாண்டில் முதல் ஓரிரண்டு வாரங்கள் தீவிரமான அரசியல் காய் நகர்த்தல்களுக்கான காலமாக இருக்கும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

✦ ✦ ✦

யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. கூட்டத்துக்குச் சென்றிருந்த சபை உறுப்பினர்களுக்கு மேசைகளில் ஓர் அழைப்பிதழ் காத்திருந்தது. மேயர் மணிவண்ணன், ஈ.பி.டி.பி. உறுப்பினர் றெமிடியஸ் ஆகயோரின் பிறந்த தின கூட்டு விருந்துபசாரம் அன்று மாலை விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெறுவது பற்றிய அழைப்பு அது.


பிறந்த நாள் விருந்துபசார
அழைப்பிதழ்

இருவரும் சட்டத்தரணிகள். இருவருமே சேர்ந்து அழைப்பதாக அந்த இதழ் இருந்தது. அதனைப் படம் பிடித்து முகநூலில் சேர்த்த ஒரு கனவான் அதற்கு 'இரு வீட்டார் அழைப்பு' என்று குத்தலாகத் தலைப்பிட்டிருந்தார்.

இருவீட்டார் அழைப்புக்கு கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செவிசாய்க்கவில்லை.

மற்றத் தரப்புகள் எல்லாம் – மணி அணி, ஈ.பி.டி.பி. அணி எல்லாம் – 'செம' கொண்டாட்டம். அதனை ஹோட்டல் ஊழியர் ஒருவர் கைத்தொலைபேசியில் படம் எடுக்க, அதனைப் பார்த்த 'பார்ட்டி' கம்பனியில் ஒருவர் ஹோட்டல் முதலாளியிடம் போட்டுக் கொடுக்க, சம்பந்தப்பட்ட ஊழியருக்கு அங்கே வைத்தே – அவர்கள் முன்னிலையிலேயே – 'சாத்துப்படி' நடந்ததாகவும் தகவல்.

மணிவண்ணனின் மேயர் பதவி உறுதிப்படுத்தப்பட்டதன் கொண்டாட்டம் இப்படி 'இருவீட்டார் அழைப்பு' ஆக செமையாக நடந்தேறியது. வாழ்க யாழ். நகரம்!

**- மின்னல் -**

## பஸ் கட்டணங்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகரிப்பை மேற்கொண்டுள்ளோம்.

அனைத்து பஸ் வழிப்பாதைகளிலும் மாறுபட்ட அளவில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பஸ் கட்டண சூத்திரத்தை விட குறைந்த அளவிலான அதிகரிப்பையே மேற்கொண்டுள்ளோம்.

குறித்த பஸ் கட்டண அதிகரிப்பு சூத்திரத்துக்கு அமைய கட்டணங்களை அதிகரிக்க வேண்டுமாயின் கட்டணங்களை 20 - 25 வீதம் வரை அதிகரிக்க நேரிடும் நிலை காணப்படுகின்ற போதிலும் அதனை 16.5 - 17 வீதத்துக்கு மட்டுப்படுத்தும் முடிவை எடுத்துள்ளோம்.

பஸ் சங்கங்களும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன - என்றார்.

## கானமயில்நாதனுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வட்டுக்கோட்டையில், அவர் கல்வி கற்ற வட்டு. இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை ஊடகவியலாளர்கள் மற்றும் ஊரவர்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்துவர்.

இதில் அனைத்து தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## தமிழ் இளைஞர்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை அரசு பிரபாகரனைப் பயங்கரவாதியாகப் பார்த்தாலும், தமிழ் மக்கள் அவரை அவ்வாறு பார்க்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரபாகரனின் புகைப்படம் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அறையில் காணப்பட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டு, ஒன்றியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். பின்னர் தற்போது அவர்கள் மீது மீண்டும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இது கண்டிக்கத்தக்க விடயம். படம் வைத்திருந்தால் பிரச்சினை என்றால் எத்தனை பேரை இவர்கள் இன்னமும் கைது செய்ய வேண்டும்.

தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. இளைஞர்களின் மீது உள்ள இப்படியான வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டும். மீண்டும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இறுக்கமாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

அரசு பிரபாகரனைப் பயங்கரவாதியாகக் கூறினாலும் தமிழ் மக்கள் அவரை அவ்வாறு பார்க்கவில்லை.

'சேகுவரே' போராளியின் படங்கள் பொறிக்கப்பட்ட ரீசேட்களை சிங்கள இளைஞர்களும் அணிந்துகொள்கின்றனர். அப்போது அவர்களை இந்த அரசு கைது செய்யுமா? காலத்துக்குக் காலம் அரசு தனக்கு வேண்டாதவர்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கின்றது - என்றார்.

## டுபாய் பயணத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்நிலையில், இதற்காக ஜனவரி 2ஆம் திகதி டுபாய் புறப்படுவதற்குப் பிரதமர் திட்டமிட்டிருந்தார்.

எனினும், இலங்கையில் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடிகள் உள்ளிட்ட காரணங்களால் பிரதமர் தனது டுபாய் பயணத்தை இரத்துச் செய்துள்ளார் என்று பிரதமரின் தலைமை அதிகாரி யோஷித ராஜபக்ஷ உறுதிப்படுத்தியுள்ளார்.

## மஹிந்த எமக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வுபெறவுள்ளார் எனத் தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன. இதன் பின்னணியில் சூழ்ச்சி இருக்கக் கூடும். பிரதமரை வெளியேற்றுவதற்குச் சிலர் முற்படக்கூடும். பிரதமர் ஓய்வுபெறுவதாக இருந்தால் எமக்கு அறிவித்துவிட்டே செல்வார். அவர் தற்போது ஓய்வுபெறக் கூடாது. ஜனாதிபதிக்குப் பக்க பலமாக இருக்க வேண்டும்.

கட்சி அரசியல்தான் இந்த நாட்டுக்கு சாபக்கேடு. தன்னைச் சூழவுள்ள சூழ்ச்சிக்காரர்களை ஜனாதிபதி இனங்காண வேண்டும் - என்றார்.

## அமெரிக்காவிலிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடு திரும்பிய கையோடு முக்கியத்துவமிக்க அரசியல் சந்திப்புகளை நடத்துவதற்கும் பஸில் திட்டமிட்டுள்ளார். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி செயலாளர் பதவியில் இருந்து விலகும் பி.பீ. ஜயசுந்தரவுக்கு நிதி அமைச்சில் வழங்கப்படவுள்ள பொறுப்பு பற்றியும் ஆராயப்படவுள்ளது.

## மேலும் 21 பேர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 944 ஆக அதிகரித்துள்ளது.

## அதிபர்கள், .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சம்பள உயர்வுக்கான நடவடிக்கைகள் சம்பளம் மற்றும் ஊதிய ஆணைக்குழு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று கல்வி அமைச்சின் செயலாளரான பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

எனினும், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான சுற்றறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட வேண்டும். அத்தகைய சுற்றறிக்கையின் வெளியீடுகளுடன், சம்பளக் கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளரான ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## ஜனநாயக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த நாட்டிலுள்ள இரு பிரதான சம்பிரதாய கட்சிகள்மீது மக்கள் நம்பிக்கையிழந்துவிட்டனர். மாற்றுத் தேர்வு பற்றியும் சிந்திக்கின்றனர். அதற்கான தேர்வாக ஜே.வி.பி. உள்ளது. கீழ்மட்ட ஆதரவு எமக்கு மிக முக்கியம். அதேபோல நாட்டை மீட்பதற்கான பொதுவான வேலைத்திட்டம் தேசிய மக்கள் சக்தி ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, தேசிய மட்டத்திலான தேர்தலொன்று நடத்தப்படும் பட்சத்தில், மக்கள் வாக்களிப்புமூலம் – அதாவது ஜனநாயக வழியில் இடம்பெறும் ஆட்சி மாற்றத்தையே நாம் விரும்புகின்றோம். தேர்தல் ஊடாகவே நாம் மக்களிடம் ஆட்சியைக் கோருவோம். மாறாக உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, ஆட்சியைக் கவிழ்க்கும் அரசியல் நடைமுறை எமக்கு பொருந்தாது.

தற்போதைய சூழ்நிலையில் அரசு தேர்தலொன்றுக்கு செல்லாது. ஆனால் மக்கள் எழுச்சியையும் கட்டுப்படுத்த முடியாது. எது எப்படி இருந்தாலும் தேர்தலொன்று நடத் தப்படும்வரை நாம் காத்திருப்போம். தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றையும் உருவாக்குவோம் - என்றார்.

## ஜனவரி 9 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருத்தாடல்கள் இடம்பெற்றன. அவ்வாறான பின்னணியில் சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கை வரவுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# 20 ஆவது திருத்த சட்டத்தின் மூலம் ராஜபக்ஷ குடும்பத்துக்கே நன்மை!

## இராதாகிருஷ்ணன் இடித்துரைப்பு




20 ஆவது திருத்த சட்டத்தின் மூலம் ராஜபக்ஷ குடும்பத்துக்கே பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியா – இராகலை சென்.லெனாட்ஸ் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கருத்து தெரிவிக்கின்ற பொழுதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணனுக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒரு தொகை பொருள்கள் வலப்பனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பெருந்தோட்ட மக்களுக்கும், கிராமபுற மக்களும் நுவரெலியா – இராகலை சென்.லெனாட்ஸ் ஆலய மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மலையக தொழிலாளர் முன்னணியின் நிதி செயலாளர் விஷ்வா புஷ்பநாதன், வலப்பனை பிரதேச சபை உறுப்பினர்களான தமிழ்மாறன் ஜனார்த்தன், அ.ஹரிச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அங்கு கருத்து தெரிவித்த நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் மேலும் தெரிவிக்கையில் –

நல்லாட்சி அரசாங்கம் 19 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்கியது. ஆனால் அந்த நல்லாட்சியில் எதுவும் சரியாக நடைபெறவில்லை. அதற்குகட காரணம் ஜனாதிபதிக்கு அதிகாரங்கல் இல்லாமையே என்று கூறி இந்த அரசாங்கம் 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து ஜனாதிபதிக்கு எல்லா அதிகாரங்களையும் கொடுத்தது. எல்லா பிரச்சினைகளையும் ஒருவரால் தீர்த்துவிட முடியும் என்று கூறியே இந்த அதிகாரங்களை ஜனாதிபதிக்கு கொடுத்தது.

ஆனால், பிரச்சினைகள் தீர்ந்தனவா? இல்லை எல்லா பிரச்சினைகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. எனவே, இந்த 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் எந்தவிதமான பயனும் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. இந்த அதிகாரத்தின் மூலமாக ஜனாதிபதியால் எதனையும் சாதிக்க முடியவில்லை. ஒரு விடயம் நடந்திருக்கின்றது இந்த சட்டத்தின் மூலமாக ராஜபக்ஷ குடும்பத்துக்கு பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற பொழுது அன்று அனைவரும் நினைத்தார்கள் இனி மேல் இந்த நாட்டில் அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று நினைத்து அன்று 69 லட்சம் மக்களும் வாக்களித்து இன்றைய ஜனாதிபதியையும் பிரதமரையும் தெரிவு செய்தார்கள்.

ஆனால், நாங்கள் மலையக மக்களுக்கு கூறினோம். எங்களுக்கு வாக்குரிமையை பெற்றுக் கொடுப்பதில் முக்கிய பங்கு வகித்தவர் மறைந்த ஜனாதிபதி ரணசிங்ஹ பிரேமதாஸ. எனவே அவருடைய மகன் சஜித் பிரேமதாஸவிற்கு எங்களுடைய வாக்குகளை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டோம். அதன்படி 60 வீதமான எங்களுடைய மக்கள் சஜித் பிரேமதாஸவிற்கு வாக்களித்தார்கள். ஆனால் நாட்டில் ஏனைய பகுதியில் இருந்த மக்கள் செய்த தவறின் காரணமாக நாம் இன்று 40 வருடங்கள் பின்நோக்கி சென்றுவிட்டோம். மீண்டும் எல்லா பொருளகளுக்கும் வரிசையில் நிற்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்று இந்த அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்களே இந்த அரசாங்கத்தை விமர்சனம் செய்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. நான் நினைக்கின்றேன் இன்று எதிர்கட்சியைவிட அரசாங்கத்தை அதிகம் விமர்சனம் செய்வது ஆளும் கட்சியின் அமைச்சர்களே.

இன்று அரசாங்கம் எந்த திட்டத்தை முன்வைத்தாலும் அதனை நடைமுறைபடுத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையை பொருள்களுக்கு விதித்தாலும் அதனை யாரும் கண்டு கொள்வதில்லை. இன்று உரத்தின் விலை ஒரு மூடை 9 ஆயிரமாக இருக்கின்றது. இந்த விலைக்கு உரத்தை வாங்கி விவசாயிகள் இலாபம் அடைய முடியுமா? இன்றைய மரக்கறிகளின் விலையை மக்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதே போல அரிசியின் விலையையும் மக்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இன்று இலங்கையில் இருந்து அநேகமானவர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதற்கே முயற்சி செய்கின்றார்கள். அநேகமாக அனைவரும் கடவுச் சீட்டை பெற்றுக் கொள்வதில் ஆர்வமாக இருக்கின்றார்கள்.

இலங்கைக்கு ஆபத்தின் பொழுது உதவுவது இந்தியா என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் அதே நேரத்தில் சீனாவும் எங்களுக்கு உதவி செய்கின்றது. அதற்காக அவர்கள் எங்களிடம் இருந்து எதையாவது எதிர்பார்க்கின்றார்கள்.அது நடைமுறை ஏனென்றால் அவர்கள் கடன் கொடுக்கின்ற பொழுது எதனையாவது எதிர்பார்ப்பார்கள். ஏனென்றால் யாரும் யாரையும் நம்பி கொடுக்கின்ற ஒரு நிலைமை தற்பொழுது இல்லை.

எனவே, நாம் எமது பொருளாதாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக எதையாவது விட்டுக் கொடுக்க வேண்டிய ஒரு நிலைமையிலேயே நாங்கள் இருக்கின்றோம். எனவே, நாங்கள் அனைவரும் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

## நாட்டில் உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய அரசு தவறிவிட்டது

### மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

அடுத்த வருடம் நாட்டில் ஏற்படவுள்ள கடுமையான உணவுப் பற்றாக்குறை தொடர்பாகப் பல தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் இன்றுவரை அரசாங்கம் அதற்குரிய நடவடிக்கையை எடுக்கவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் எந்தவித வேலைத் திட்டமும் இல்லை என அவர் குற்றம் சாட்டினார்.

அத்தோடு நாட்டில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக அரசதரப்பினர் பெருமை பேசிக் கொண்டு இருக்கின்றனர் எனவும் அவர் குற்றம் சாட்டினார். உணவுப் பொருள்கள் மற்றும் பொருள்களின் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ள அதேநேரம் இந்த நிலைமை இன்னும் மோசமாகும் என்றும் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

எவ்வாறாயினும், நிலவும் நெருக்கடிக்குத் தீர்வு காண அரசாங்கம் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என நளிந்த ஜயதிஸ்ஸ குற்றம் சாட்டினார்.

## சதொச நிவாரண பொதியில் மாற்றம்!

### அமைச்சர் பந்துள தெரிவிப்பு



பண்டிகைக் காலத்தில் சதொச விற்பனை நிலையங்களில் நுகர்வோர் கொள்வனவு செய்யக்கூடிய அரிசியின் ஆகக்கூடிய அளவை 10 கிலோகிராம் வரை அதிகரிக்க வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.


இதன்படி கடந்த செவ்வாய்க்கிழமை முதல் டிசெம்பர் 31ஆம் திகதி வரை இதற்கான சந்தர்பபம் வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், சதொச நிவாரணப் பொதிக்கு சீனியை கொள்வனவு செய்யாத வாடிக்கையாளர்களுக்கு மேலதிகமாக இரண்டு கிலோகிராம் அரிசி வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1,998 ரூபா நிவாரணப் பொதிக்கு 10 கிலோ கிராம் சம்பா அரிசி வழங்கப்படுகின்றது. அந்த நிவாரணப் பொதியைத் தயாரிக்கும்போது, 2 கிலோ கிராம் உள்நாட்டு சிவப்பு சீனியும் வழங்குகின்றோம். சில சதொச விற்பனை நிலையங்களில் சிவப்பு சீனி போதிய கையிருப்பு இல்லாத நிலையில், அதற்குப் பதிலாக என்ன கொள்வனவு செய்வது என்ற கேள்வி எழுந்தது. எனவே செவ்வாய் முதல் டிசெம்பர் 31ஆம் திகதி வரை நிவாரண பொதிக்கு சிவப்பு சீனியை கொள்வனவு செய்ய முடியாதவர்கள் அதற்குப் பதிலாக மேலதிகமாக 2 கிலோ கிராம் சம்பா அரிசியைக் கொள்வனவு செய்ய முடியும்.– என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், செவ்வாய் முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை சதொச விற்பனை நிலையங்களில் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட 5 கிலோ கிராம் அரிசிக்குப் பதிலாக 10 கிலோ கிராம் அரிசி வழங்கப்படும். அதன்படி புத்தாண்டுக்காக சதொச நிறுவனத்திடமிருந்து 10 கிலோ சுப்பர் சம்பாவை 130 ரூபா விலையில் பெற்றுக் கொள்ள முடியும். இந்தச் சலுகை டிசெம்பர் 31 வரை மட்டுமே வழங்கப்படும். என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரண்டு கைக்குண்டுகள் கந்தளாயில் மீட்கப்பட்டன



கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து சேனநாயக்க மாவத்தையில் உள்ள நெல் களஞ்சியசாலை பகுதியில் இரண்டு வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளை கண்டெடுத்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினரால்க குறித்த கைக்குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன என கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சீனாவின் கடன்பொறி

வருடத்தின் இறுதிக் கட்டம். புது வருடம் பிறப்பதை ஒட்டி சந்தோசமான தகவல் போன்று ஒரு விடயத்தை தமது 'டுவீட்' செய்தியாக வெளியிட்டிருக்கின்றார் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்.

நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்தில் விழுந்து கிடக்கின்றது. விலைவாசி எகிறுகின்றது. பொருள்களின் விலைகள் கட்டுப்பாட்டில்லாமல் உயர்ந்து வருகின்றன. நாளொரு விலை, பொழுதொரு கட்டணம் என்று உயரும் விலைவாசிக்கு ஈடு கொடுக்க முடியாமல் சாமானிய மக்கள் பெருந்தடுமாற்றத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர். பணவீக்கத்தால் ரூபாவின் மதிப்பும் வேகமாகச் சரிந்து வருகின்றது.

எனினும் டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதியை செயற்கையாக 205 ரூபா அளவில் தூக்கி நிறுத்தி வைத்திருக்கின்றது அரசு. ஆனால் வெளியில் சாதாரண சந்தையில் அது 240 ரூபா வரை எகிறிவிட்டது.

வெளிநாட்டு செலாவணி வற்றி, அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்யக் கூட கையிருப்பில்லாமல் தடுமாற்ற நிலைமை. அத்தியாவசியப் பொருள்களுடன் வந்து சேர்ந்த ஆயிரக்கணக்கான கொள்கலன்கள், அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லாமையால், 'கிளியர்' பண்ணப்படாமல் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் அவலம். அதேசமயம் அந்தப் பொருள்கள் சந்தையில் தட்டுப்பாடு காரணமாக மக்கள் அவலப்படுகின்றனர். வெளியில் கையிருப்பில் இருக்கும் அந்தப் பொருள்களும் மவுசு – கேள்வி – உயர்வு காரணமாக எக்கச்சக்க விலைக்கு விற்கப்படுகின்றன.

இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆண்டு இறுதியில் – அதாவது இன்னும் இரண்டு நாள்களில் – அந்நியச் செலாவணிக் கையிருப்பு முற்றாகக் கரைந்து, நாடு முற்றாகத் திவாலாகும் என்று கருதப்படும் நிலையில்தான், இலங்கை மத்திய வங்கியின் அந்நிய செலாவணிக் கையிருப்பு 310 கோடி அமெரிக்க டொலர்களாக (சுமார் எழுபதாயிரம் கோடி ரூபாவாக) உயர்ந்திருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் 'டுவீட்' செய்தி வெளியிட்டிருக்கின்றார்.

இத்தகைய கடன் கொடுப்பனவு ஒன்று சீனாவிடம் இருந்து கிடைக்கவிருக்கின்றது, அதனால் புதுவருடத்தை ஒட்டி ஓரிரு வாரங்கள் மூச்சுவிடக் கூடிய நிலைமை வரும் என இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அதுதான் நடந்திருக்கின்றது.

ஆனால், இந்தச் செய்தி தற்காலிகமாக மூச்சுவிட கடன் கிடைத்திருப்பது – திருப்தி தரும், மகிழ்வான தகவல் என்றால் – மத்திய வங்கி ஆளுநர் அது குறித்துச் செய்தியாளர் மாநாடு கூட்டி அறிவித்திருக்கலாம். எனினும், அப்படிச் செய்யாமல் 'டுவிட்' தகவலுடன் அவர் தப்பிக்கொள்ளப் பார்க்கின்றார். அதற்குக் காரணம் உண்டு. செய்தியாளர்களின் பிய்ச்சல், பிடுங்கல் கேள்விகளுக்கு முகம் கொடுக்க அவர் பின்னடிப்பதுதான் காரணம்.

இப்போது கையிருப்பில் உள்ள 310 கோடி அமெரிக்க டொலரில் பெரும் பகுதி சீனாவிடமிருந்து நிபந்தனை அடிப்படையில் கிடைத்த கடன். அதாவது சீனப் பொருள்களை இறக்குமதி செய்ய மட்டுமே இந்த அந்நியச் செலாவணியைப் பயன்படுத்த முடியும். அதாவது உச்ச நெருக்கடியில் இருக்கும் இலங்கைக்கு சீனா கடன் என்ற பெயரில் வைக்கும் அடுத்த பொறியின் ஒரு வடிவம்தான் இந்தத் தற்காலிக மூச்சுவிடுவதற்கான கடன் உதவி. அதை எங்கே செய்தியாளர்கள் கேட்டுத் தொலைத்து விடுவார்களோ என்பதைச் சமாளிப்பதற்குத்தான் இப்படி 'டுவிட்' மூலம் மட்டும் செய்தி வெளியிடும் தந்திரம்.

# சீனாவின் நம்பிக்கையை எதிர்க்கட்சி வென்றுள்ளது



## சஜித் பெருமிதம்

ஐக்கிய மக்கள் சக்தியின் மருத்துவ உபகரண நன்கொடை திட்டமான 'ஹஸ்மாக்'க்கு சீன அரசாங்கம் 19.6 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியது.

சீனத் தூதுவர் குய் ஜென்ஹாங்கிடமிருந்து நன்கொடையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொண்டார். சிறுநீரக நோயாளர்களுக்கான டயாலிசிஸ் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

ஒரு வெளிநாட்டுத் தூதரகம் எதிர்க்கட்சிக்கு நிதி வழங்குவது இதுவே முதல் முறை எனக் குறிப்பிட்ட சஜித் பிரேமதாஸ, சீனாவின் நம்பிக்கையை தம்மால் வெல்ல முடிந்துள்ளது என்றும் பெருமிதம் வெளியிட்டார்.

கொரோனா தொற்று பரவலை அடுத்து நாடளாவிய ரீதியில் உள்ள 34 வைத்தியசாலைகளுக்கு 101 மில்லியன் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளதாகவும் சஜித் பிரேமதாஸ கூறினார்.

# கொவிட் பாதிப்பு எண்ணிக்கை குறித்து வெளியாகும் தரவு துல்லியமானது அல்ல

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் சுட்டிக்காட்டு

நாட்டில் தற்போது கொரோனா நோயின் ஆபத்து இல்லை எனக் கருதி ஐம்பது வீதமான பொதுமக்கள் தங்களின் பூஸ்டர் டோஸ்களைப் பெற முன்வருவதில்லை என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தினசரி கொரோனா பாதிப்பு எண்ணிக்கை அறிவிப்புகள் பொதுமக்களைத் தவறாக வழிநடத்துவன என்று தெரிவித்த அந்த சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண, இதன் காரணமாக கொரோனா கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக எண்ணி, மக்கள் மிகவும் கவனக்குறைவாகவும், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதில் அறியாமையைக் காட்டுகின்றனர் எனவும் கூறினார்.

இருப்பினும், சமூகத்தின் அடிமட்டத்தில், நிலைமை மோசமடைந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு மேலும் தெரிவித்த அவர், அரசாங்கம் தினசரி 500 முதல் 600 வரையிலான கொரோனா பாதிப்பு எண்ணிக்கையை அறிவிப்பதாகவும் ஆனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தினமும் அறிவிக்கப்படும் தரவு துல்லியமானது அல்ல என்று அவர் கூறினார்.

இந்நிலையில், மக்கள் கொரோனா விதிகளை மீறி மோசமாக நடந்துகொள்வதை அவதானிப்பதாக அவர் தெரிவித்தார்.

சமீபத்தில் முடிவடைந்த கிரிக்கெட் போட்டிகளில், ரசிகர்கள் பெரும்பாலும் முகக்கவசம் இல்லாமல் காணப்பட்டதோடு, சமூக இடைவெளியைப் பராமரிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

தினசரி நேர்மறை வழக்குகள் குறித்த தவறான அறிவிப்புகளால், நாடு தொற்று நோய் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்ததாக மக்கள் மனநிறைவுடன் உள்ளனர் என்றும் இந்த மனநிறைவு மக்களை கவனக்குறைவாக நடந்துகொள்ள வழிவகுக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, நாட்டில் மிகவிரைவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் இருப்பதாகவும், அத்தகைய பேரழிவு நிலைக்கு நாட்டை இழுத்துச் செல்வதற்கான பொறுப்பை சுகாதார அதிகாரிகளும் அரசாங்கமும் ஏற்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# வடக்கு – கிழக்கை இணைக்க வேண்டாம் எனக்கோரி ஓட்டமாவடியில் சிலர் போராட்டம்!




வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு நடவடிக்கைகள் திரைமறைவில் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவித்து ஐக்கிய காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கமைய செவ்வாய்க்கிழமை ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் கல்குடாத்தொகுதி அமைப்பாளர் சல்மான் வஹாப் தலைமையில் மட்டக்களப்பு ஓட்டமாவடியில் நடைபெற்ற கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு சுலோகங்களை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன்போது வடக்கு – கிழக்கை இணைப்பதற்குத் துணை போகும் முஸ்லிம் காங்கிரஸின் துரோகத்தனத்தைக் கண்டிக்கின்றோம். கிழக்குத் தலைமைகளின் அனுமதியற்ற தீர்வுகளை ஏற்கமாட்டோம். வடக்கு கிழக்கை இணைக்காதே போன்ற வாசகங்களுடன் எதிர்பபை அவர்கள் வெளிப்படுத்தினர்.

மேலும் வடக்கு, கிழக்கு இணைவிற்கு எதிராக ஐக்கிய காங்கிரஸ் கட்சியால் தேசிய மட்டத்தில் ஊடக மாநாடுகளும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்துப்பட்டு வருகின்றன என கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

# சுகாதார விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களை பெரும்பாலான மக்கள் கடைப்பிடிகின்றார்கள்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு



பண்டிகைக் காலங்களில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை பெரும்பாலான மக்கள் கடைப்பிடிக்கின்றனர் எனப் பொது சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைத்த அவர், பண்டிகைக் காலங்களில் மக்களின் நடத்தை திருப்திகரமாக உள்ளனவா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக ஊடகங்களுக்க் கருத்து தெரிவித்த அவர், சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் பின்பற்றினால் பண்டிகை காலத்தைக் கொண்டாட முடியும், இல்லை என்றால், அடுத்த சில வாரங்களில் கடுமையான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனக் கூறியிருந்தார்.

மேலும் இந்த ஆண்டு தொடக்கத்தில் ஏற்பட்டதைப் போன்று, எதிர்வரும் பண்டிகைக் காலத்துக்குப் பின்னர் கொரோனா தொற்று பரவாமல் இருக்க அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



# மண்முனை மேற்கு பிரதேச வட்டாரங்களுக்கு திட்டமுன்மொழிவு தொடர்பில் ஆராய்வு கூட்டம்!

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரங்களுக்கு எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் வழங்கப்படவுள்ள நிதிக்கான திட்டமுன்மொழிவுகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் வவுணதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது இந்தப் பிரதேசத்திலுள்ள 10 வட்டாரங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள உட்கட்டமைப்பு, வாழ்வாதாரம் உள்ளிட்ட திட்டங்களின் முன்மொழிவுகளை பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிராம பிரதிநிதிகள் போன்றோர் இணைந்து திட்டங்களை ஆராய்ந்து சமர்ப்பித்தனர்.

ஒரு வட்டாரத்துக்கு 40 லட்சம் ருபா ஒதுக்கீட்டில் மேற்படி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுக் செயலாளர் பூ.பிரசாந்தன், மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் சண்முகராஜா, பிரதே செயலக திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பிபிலையிலிருந்து செங்கலடி வரையான வீதி பொது மக்களின் பாவனைக்கு!





சவூதி அரேபிய நிதி உதவியின் கீழ் 720 கோடி; ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட பேராதனை – பதுளை – செங்கலடி (ஏ005) வீதியின் பிபிலையிலிருந்து செங்கலடி வரையிலான 86.7 கிலோமீற்றர் பகுதி பொதுமக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைக்கும் பேராதனை – பதுளை – செங்கலடி (ஏ005) வீதி 275 கிலோமீற்றர் நீளமானது. பிபில முதல் செங்கலடி வரையிலான 86.7 கிலோமீற்றர் நீளமான வீதி ஆளும் தரப்பு பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) விரிவுபடுத்தப்பட்டு பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

பிபிலையிலிருந்து செங்கலடி வரையிலான அபிவிருத்தி செய்யப்பட்ட வீதியின் நீளம் 86.7 கி.மீ. இந்த வீதி அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு கடந்த 2014ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. இந்த வீதியை இரண்டு உள்ளூர் நிர்மாணத்துறை நிறுவனங்கள் மூன்று கட்டங்களாக நிர்மாணித்துள்ளனர்.

முதற்கட்டமாக பிபில முதல் பதியத்தலாவை வரையிலான 29 கிலோமீற்றர் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. . இரண்டாம் கட்டமாக பதியத்தலாவ தொடக்கம் தம்பிட்டி வரை 30 கிலோமீற்றர் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டமாக தம்பிட்டிய முதல் செங்கலடி வரையிலான 27.7 கிலோமீற்றர் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. பிபிலை முதல் செங்கலடி வரையிலான வீதி அபிவிருத்தித் திட்டத்துக்கு 720கோடி ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வீதி நிர்மாணத்தின் போது நிலங்களையும் சொத்துக்களையும் இழந்த பிபில, ரிதீமாலியத்த, பதியத்தலாவ மற்றும் மஹாஓயா ஆகிய பிரதேச செயலக பிரிவு மக்களுக்கு ஒரு கோடியே 24 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் எஸ். வியாளேந்திரன், சவூதி அபிவிருத்திக்கான நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுல்தான் அல் மர்ஷாத், நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன், நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# கடனைச் செலுத்துவதற்கு கால அவகாசம் இலங்கைக்கு நீடித்துள்ளது பங்களாதேஷ்

பங்களாதேஷ் வங்கியிடம் இருந்து இலங்கை பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கடனைத் திருப்பிச் செலுத்தும் மூன்று மாத கால அவகாசம் முடிவடைந்தநிலையில் இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக கால அவகாசம் நீடிக்கப்பட்டது என பங்களாதேஷ் வங்கி அறிவித் துள்ளது.

பங்களாதேஷ் ஊடனான நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் மூன்று தவணைகளின் அடிப்படையில் 20கோடி டொலர் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் 19 இல் 5 கோடி டொலர்களையும் 10 கோடி டொலர் இரண்டாவது தவணை ஓகஸ்ட் 30 அன்றும் 5 கோடி டொலர் இறுதி தவணை செப்ரெம்பர் 21 அன்றும் வழங்கப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி, பங்களாதேஷுக்கு கடன் தொகைக்கு வட்டியாக 2 சதவீதத்தை இலங்கை அரசாங்கம் செலுத்தவேண்டும்.

ஆறு மாதங்களுக்குப் பின்னரும் தவணை நிதி செலுத்தப்படாமல் இருந்தால், 2.5 சதவீதம் மற்றும் கடன் தொகை திருப்பிச்செலுத்த வேண்டும்.

எனினும் இலங்கை குறைந்த பட்சம் ஒன்பது மாதங்களுக்கு இந்த நிதியைப் பயன்படுத்தும் என தாம் எதிர்பார்ப்பதாக பங்களாதேஷ் மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதாரம் 3.4 சதவீதமாக குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செயலிழந்த துப்பாக்கி, வெடிபொருள்கள் கிளிநொச்சிப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளன





கிளிநொச்சி – குமாரசாமிபுரம் பகுதியில் செயலிழந்த நிலையில் துப்பாக்கிகள் உள்ளிட்ட வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் உள்ள ஆரம்ப பிரிவு பாடசாலையின் பின்பகுதியில் உள்ள காணியிலேயே இவ்வாறு பெருமளவான ஆயுதங்களும், வெடிபொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாகக் குறித்த வெடிபொருள்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தகவலுக்கு அமைவாக தர்மபுரம் பொலிஸார் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் அனுமதி பெற்று கடந்த செவ்வாய்க்கிழமை அகழ்வு பணிகளை ஆரம்பித்தனர். பொலிஸார் , விசேட அதிரடிப்படையினர் மற்றும் பிரதேசத்துக்குப் பொறுப்பான இராணுவத்தினர் இணைந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுத்தனர்.

இதன்போது 12.7 ரக துப்பாக்கி – 01, 12.7 ரக துப் பாக்கி ஸ்ராண்ட் – 02, ஆர் பி.ஜி துப்பாக்கி – 03, ரி 57 ரக துப்பாக்கி – 06, ரி 81 ரக துப்பாக்கி – 03, ஆர் பி ஜி செல் – 10, இயக்க தாமத கடத்திகள் – 11, அணைக்கட்டு தகர்க்கும் ஆயுதம் – 05, எல் எம் ஜி ரவைகூடு – 09, 12.7 துப்பாக்கி கூடு – 01, எம் பி எம் ஜி கூடு – 01, 12.7 ரவை செயின் – 08 ஆகியன மீட்கப்பட்டுள்ளன. இதன்போது மீட்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும், வெடிபொருள்கள் ஆகியன துருப்பிடித்துக் காணப்படுகின்றன எனவும், அவை செயல் திறன் உள்ளவையா என்பது தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு, நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வெடி பொருள்கள் மீட்கப்படும் தனியார் காணியில் விடுதலைப்புலிகளின் முகாம் காணப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட - செயற்படுகின்ற - புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 236

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**607. பெரும்பான்மையினரின் இந்தப் போக்கைக் கூட்டமைப்பினரோ மற்ற தமிழ் தலைவர்களோ தெரிந்து கொள்ள வில்லையா?**

தெரிந்திருந்தார்கள். பதில் சிறிது நீளமானாலும், தெளிவுக்காக, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் 12 ஜூலை 2017 நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டதின் பின் கிளிநொச்சி கூட்டுறவாளர்கள் மண்டபத்தில் ஆற்றிய உரையின் சில முக்கிய பகுதிகளைப் பார்க்கலாம்.

"ஒற்றயைாட்சி எனும் சொல்லோ அல்லது சமஷ்டி எனும் சொல்லோ இல்லாமல் அதிகூடிய, உறுதியான, மத்திய அரசினால் மீளப்பெற முடியாத அதிகாரப் பகிர்வு புதிய அரசியல் சாசனத்தின் மூலம்கொண்டுவரப்படுமானால்அதனை நாங்கள் பரிசீலிப்போம். இன்றைய நிலைமை ஒரு சிக்கலான நிலைமை. இந்த நிலையில் கருத்துக்கள் கூறுவது இலகுவான விடயமல்ல. அரசியல் தீர்வு சம்பந்தமான முயற்சிகளை குழப்புவதற்கு பல தரப்புக்கள் மிகவும் தீவிரமாகச் செயற்படுகின்றன. பெரும்பான்மை இனத்தின் மத்தியிலும் தீவிரப்போக்குடையவர்கள் இந்த முயற்சியை குழப்புவதற்கு மிகவும் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார்கள். மஹிந்த ராஜபக்ஷவுடைய அணியைச் சேர்ந்தவர்கள், அவருடன் சேர்ந்து செயற்படுகின்ற வேற சில கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தீவிரமாக புதிய அரசியல் தீர்வு விடயத்தைக் குழப் ப செயற்படுகிறார்கள். பெரும்பான்மை இன மக்களைக் குழப்பி ஒரு



தீர்வு ஏற்படுவதைத் தடுக்க இவர்கள் முற்படுகிறார்கள்".

"அதே சமயம் மக்களால் இந்தக் கருமங்களை கையாள்வதற்கு தெரிவு செய்யப்படாதவர்கள், இன்றைக்கு இடம்பெறுகின்ற முயற்சிகளைப் பல விதமான குற்றங்கள் கூறி, மக்களின் மனதில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிப்பதை நாங்கள் அவதானிக்கிறோம்.

ஓர் இரகசியத் தீர்வு சம்பந்தமாகத் தற்போது ஆக்க பூர்வமான உறுதியான முயற்சி நடைபெறுகிறது. ஒரு நியாயமான, நல்ல சூழல் தென்படுகிறது. நியாயமான நல்ல சூழல் என்று நான் கூறுவதற்குக் காரணம் என்னவென்றால் இந்த அரசாங்கம் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் உருவாகியது. ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேனவினுடைய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியது. ஆனபடியால் இன்று ஆட்சி செய்கின்ற அரசாங்கம் இரண்டு கட்சிகளைச் சார்ந்த ஓர் அரசாங்கம். அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபெரும்பான்மை இல்லாது விட்டாலும் கூட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன், ஜனதா விமுக்திப் பெரமுனவின் ஆதரவுடன், ஏனைய இஸ்லாமியத் தமிழ் உறுப்பினர்களின் ஆதரவுடன் இலகுவாக மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது" – என்றார்.

பின்னர், ஜனாதிபதி சந்திரிக்கா அரசியல் சாசனத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி, புதிய அரசியல் சாசனத்தில் பெருமளவில் நியாயமான அதிகாரப் பகிர்வை உருவாக்கி, ஒரு நியாயமான தீர்வை கொண்டு வர எடுத்த முயற்சிகள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற முடியாததால் கை விடப்பட்டதையும், அன்றைய நல்லாட்சி நிலையில் எல்லோரையும் இணைத்து நியாயமான தீர்வுக்குப் போக முடியும் என்ற நம்பிக்கையை தெரிவித்தார். அவற்றை விளங்கப்படுத்தினார்.

"புதிய அரசியல் சாசனத்தில் கவனிக்க வேண்டியவை என்னவென்றால் முதலாவது – தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு; இரண்டாவது– ஜனாதிபதி நிர்வாக ஆட்சி முறை மாற்றம்; மூன்றாவது – தற்போதைய தேர்தல் முறை மறுசீரமைப்பு."

"புதிய அரசியல் சாசனம் உருவாக்கும் முயற்சி தொடர்பில் நாங்கள் அதிகம் பத்திரிகைகளுக்குக் கூறுவதில்லை. அவ்வாறு கூறினால் சம்பந்தன் இப்படி சொல்கிறார் எனச் சொன்னவுடன் தெற்கு பகுதியில் இருந்து பத்து பேர் அதற்கு பதில் சொல்ல வந்து விடுவார்கள். அது பெரும்பான்மை இனத்தின் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஆனபடியால் எமது மக்கள் ஓரளவுக்கு நிலைமைகளை அறியாமல் இருக்கும் சூழல் இருந்தாலும் கூட நாங்கள் மௌனிகளாக இருக்க வேண்டிய கட்டாயச் சூழல் இருக்கத்தான் செய்கிறது." + என்றும் அவர் கூறினார்.

**608. இவற்றைப் பார்த்தால் இன்று நடக்கின்றவற்றின் பிரதிபலிப்பாகத்தானே இருக்கின்றது? மற்ற தமிழ்த் தேசியத் தலைவர்களோடு மட்டுமல்ல, கூட்டமைப்பின் கூட்டுக் கட்சிகளிடமே ஒன்றும் கலந்துரையாடல் இல்லையா?**

'மக்களால் தெரியப்படாதவர்கள் இன்று இடம் பெறுகின்ற முயற்சிகளை குழப்ப முயற்சிக்கிறார்கள்' என்று 2017 இல் சொன்னது ஊடகங்க ளையும் அரசியல்ஆய்வாளர்களையும்சிவில்அமைப்புக்களையும் குறித்தது. இன்றைக்கு அவை கூட்டு கட்சிகளின் தலைவர்கள், மற்ற கட்சிகளையும் உள்ளடக்குகின்றது. ஆனால் அவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், எனினும் எங்களுக்கு தெரியும் என்ற தோரணை தொனிக்கிறது.

இரகசியத் தீர்வு என்றதும் பரவணியாக தமிழர் விடுதலை கூட்டணியிலிருந்து விடுதலை புலிகள் காலத்திலும், அது தாங்கள் பேசுகிறோம், அவை பற்றி பின்னர் தெரிவிப்போம் போன்ற தகவல்கள் தான் எப்பொழுதும் வந்தன. இது அதன் தொடர்ச்சியே; புதிதானதல்ல.

இதில் என்ன ரகசியம் வேண்டியிருக்கிறது? அந்தப் பேச்சு தனி ஈழம் தருகிறோம், ராஜபக்ஷக்களே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து விலத்தி விடுங்கள் என நடக்கிறதா, இல்லை சமஷ்டி தருவோம் என்ற பேரமா?

ஆக மிஞ்சினால் அதிகாரப் பகிர்வை எந்த வடிவத்தில், எந்தத் துறைகளில் தருவதென்றிருக்கும். அவற்றை வெளிப்படையாகப் பேசுவதில் என்ன கெட்டுவிடும்? அந்த அதிகார கட்டமைப்புக்கள் மாநில ஆட்சியாக 13ஆம் திருத்தச்சத்தில் அடக்கப்பட்டுள்ளன. அதனை சுயாட்சியாக மாகாண சபையிடம் கொடுப்பதா அல்லது ஆளுநர் வைத்திருப்பதா என்பதுதானே?

அதே கூட்டத்தில் சம்பந்தன் "ஆரம்பத்தில் நாங்கள் குழம்பக் கூடாது .ஒரு கட்டத்தில் எல்லாம் வெளிவரும். ஒரு தீர்வு நியாயமாக வருமாக இருந்தால் அதனை நாங்கள் எங்கள் மக்களுக்கு முன்னால் கொண்டு வருவோம். அதன் போது இவ்விதமான கூட்டங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம் ஏற்பாடு செய்து மக்களுடன் கலந்துரையாடுவோம். மக்களுக்கு விளக்குவோம்.மக்களின் கருத்தை கேட்டு, மக்களின் கருத்துக்களை அறிந்துதான் ஒரு முடிவெடுப்போம். மக்களின் அனுமதி இல்லாமல் எந்தவொரு தீர்வையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அது எங்களுடைய கடமை. மேலும் காணி, சட்டம் – ஒழுங்கு, பொலிஸ், கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், கடற்றொழில் எல்லாவிதமான கைத்தொழில், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், தொழில்வாய்ப்பு, சமூக, பொருளாதார விடயங்கள் எமது மக்களின் நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும், அதே வேளை வழங்கப்படுகின்ற அதிகாரங்கள் உறுதியானதாக மீளப்பெற முடியாததாக இருக்க வேண்டும்." – என்றும் கூறினார் சம்பந்தன்.

(வளரும்)....



# கொள்கையில் இருந்து பின்வாங்குகிறது அரசு!

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



இறக்குமதி கொள்கையை மாற்றி, பிராந்திய நாடுகளில் இருந்து தனியார் துறை மூலம் பொருள்கள் இறக்குமதி செய்யப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் சாத்தியமான ஏற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக அமைச்சர் அடுத்த மாதம் பாகிஸ்தானுக்கு இலங்கையின் வர்த்தகக் குழுவை அழைத்துச்செல்லவுள்ளார் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் 1,000 இற்கும் மேற்பட்ட அத்தியாவசியப் பொருள்களின் கொள்கலன்கள் துறைமுகத்தில் சிக்கியுள்ளன என அத்தியாவசிய உணவுப் பொருளகள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க டொலர்கள் இல்லாமையே இதற்கான முக்கிய காரணம் என சங்கத்தின் தலைவர் ஜி.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

உரிமம் பெற்ற வங்கிகள் போதுமான டொலர்களை விநியோகிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் சீனாவின் வெளிவிவகார அமைச்சர்!

சீன வெளிவிவகார அமைச்சர் வேன் வீ இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அதன்படி, அவர் எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவருடன் தூதுக்குழுவொன்றும் நாட்டை வந்தடையவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சீன உர கப்பல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கை வரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நடத்துநர்கள் இன்றி பஸ்களை இயக்கும் புதிய வேலைத் திட்டம்

நடத்துநர்கள் இன்றி பஸ்களை இயக்கும் புதிய வேலைத் திட்டத்தின் முதற்கட்ட பணிகள் இன்று (வியாழக்கிழமை) காலை ஆரம்பிக்கப்படவுள்ளன.

தானியங்கி கட்டண முறையின் அடிப்படையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

## பல்கலைக் கழக மாணவர்களை விரிவுரைக்கு அழைக்க தீர்மானம்

*அனைத்து பல்கலைக்கழகங்களிலும் மாணவர்களை மீண்டும் விரிவுரைக்கு அழைக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.*

*50 வீதம் கொள்ளளவுடன் மாணவர்களை விரிவுரைக்கு அழைக்க தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.*

*இந்தத் தீர்மானம் இன்று முதல் அமுல் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

## மத்திய வங்கியின் டொலர் இருப்பு 3.1 பில்லியன்களாக உயர்ந்தது!

### ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அறிவிப்பு

மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணய செலவாணி கையிருப்பு நேற்று (புதன்கிழமை) 3.1 பில்லியன் அமெரிக்க டொலரை அடைந்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தாம் அறிவித்தப்படி அதிகாரபூர்வமாக இந்த கையிருப்பை அடைய முடிந்திருப்பதாக அவர் தமது ருவீட்டர் செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார். அதேநேரம் இந்த தொகையை 2021ஆம் ஆண்டு முடியும் வரையில் தங்க வைத்துக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எடை குறைந்த குழந்தைகள் இலங்கையில் அதிகரித்துள்ளன

தெற்காசியாவில் குறைந்த எடை கொண்ட குழந் தைகள் இருக்கும் நாடுகள் வரிசையில் இலங்கையும் இணைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பு, 5 வயதில் சராசரியான உயரம் மற்றும் எடை இல்லாத குழந்தைகளை எடை குறைந்த குழந்தைகள் என வகைப் படுத்துகிறது.

உலக சுகாதார அமைப்பு ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் நடத்திய ஆய்வில், இலங்கை மற்றும் இந்தியாவில் எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

இந்த நாடுகளைத் தவிர பப்புவா நியூகினியா, மாலைதீவு, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனாத் தொற்று நோயின் பாதிப்பு காரணமாக இலங்கையில் எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

உணவு பாதுகாப்பு மற்றும் போக்கு நிலைமை ஆபத்துக்கு உள்ளாகும் நாடுகள் வரிசையில் இலங்கையும் இருப்பதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. மேலும் உலகில் உணவுப் பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரித்து வரும் நாடுகளில் இலங்கையும் ஒன்றென உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

# ஒரு வைத்தியர் நோயாளிக்கு வழங்கும் திடமான வார்த்தைகளே சிறந்த மருந்து!

## 13 பதக்கம் வென்ற தமிழ் மாணவி தர்ஷிகா அறிவுரை



13 தங்கப் பதக்கங்களைப் பெறுவேன் என்று நினைக்கவில்லை, ஆனால், இறுதி எம்.பி.பி.எஸ். பரீட்சையை மிகத் திறமையாக எழுத வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் இருந்தது. அதன் பிறகு பட்டமளிப்பு விழாவிற்குச் சென்றபோது எனக்கிருந்த சந்தோசத்தை வார்த்தைகளால் கூற முடியாது என வைத்தியர் தணிகாசலம் தர்ஷிகா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் 13 தங்கப் பதக்கங்களை அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த தணிகாசலம் தர்ஷிகா என்ற மாணவி பெற்று சாதனை படைத்தார்.

அவரது இந்த சாதனை, அவரது வெற்றியின் இரகசியம் மற்றும் அவரது எதிர்கால இலட்சியம் தொடர்பில் அவர் கூறுகையில் –

சிறந்த மாணவருக்கான விருது எனக்குக் கிடைக்கப்பெற்றவுடன், எனக்கு உதவியாக இருந்த அனைவருக்கும் நான் நன்றிகூறக் கடமைப் பட்டவளாக இருந்தேன்.

என்னுடைய ஆரம்பக்கல்வி, உயர்தரக் கல்வி மற்றும் பல்கலைக் கழகக் கல்வி ஆகியவற்றில் நிறைய பேர் எனக்கு உறுதுணையாக இருந் தனர்.

ஒருவர் சாதிக்க வேண்டும் என்றால் அவருடைய முயற்சியுடன் சேர்த்து அவரைச் சார்ந்தோர்களின் ஊக்குவிப்பும் மிக முக்கியமானதாக காணப்படுகின்றது.

என்னைப் பொறுத்தமட்டில் என்னை ஊக்குவித்தவர்கள் தான் அதிகமே தவிர என்னை யாரும் மட்டம் தட்டியதில்லை.

இந்த பாராட்டுக்கள் தான் எங்களது குடும்பச் சூழலில் இருந்து நான் இப்படியொரு நிலைக்கு வர மிகப் பிரதான காரணமாக அமைந்தன.

பல்கலைக்கழகத்திலும் எனது விரிவுரையாளர்கள் மற்றும் நண்பர்கள், அத்துடன் எனக்கு முன்னாள் படித்த மாணவர்கள் ஆகியோரே எனக்கு மிக உறுதுணையாக இருந் தனர்.

என்னுடைய எதிர்கால இலட்சியம் என்றால், இத்தோடு நின்று விடாமல் மேலும் படிக்க வேண்டும், அத்துடன் ஒரு சிறந்த இருதய வைத்திய நிபுணராக வரவேண்டும் என்பதே என்னுடைய அவா. அத்துடன் இந்த நாட்டு மக்களுக்கு எனது சிறப்பான மருத்துவ சேவையை வழங்க வேண்டும்.

வைத்தியர் என்றால் வெறும் கல்வித் தகைமை மட்டும் அல்ல, சமூகத்தில் உள்ள மக்களுக்கு சிறந்த சேவையாற்றுவதே. நோய்கள் எல்லாவற்றுக்கும் மருந்துகள் இல்லை.

சிறந்த மருந்து என்றால் ஒரு வைத்தியர் நோயாளிக்கு வழங்கும் திடமான வார்த்தைகள் தான். அவ்வாறான ஒரு பணியை நான் செய்ய விரும்புகின்றேன். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

### டொலர்கள் செலுத்தப்படாமையால்

## அத்தியாவசியப் பொருள்களை வழங்க தயங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள்!

இலங்கைக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உட்பட பொருள்களை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள், பொருள்களை வழங்கத் தயக்கம் காட்டி வருகின்றன என அத்தியாவசிய உணவு பொருள் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பெற்றுக்கொண்ட பொருள்களுக்காக சரியான முறையில் டொலரை செலுத்தாதமை இதற்குக் காரணம் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதன் காரணமாக சில இறக்குமதிப் பொருள்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் வெளிநாட்டு நிறுவனங்களால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

பணத்தை செலுத்தும் வரை அந்த நிறுவனங்கள் பொருள்களை வழங்குவதை நிறுத்தியுள்ளன என அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக வர்த்தக அமைச்சருடன் நடத்திய பேச்சில் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை.

எனினும் துறைமுகத்தில் உள்ள கொள்கலன் பெட்டிகளை விடுவிப்பது சம்பந்தமாக எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு ஒன்றை வழங்குவதாக அமைச்சர் கூறினார் எனவும் செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# மூக்கினால் அழுகின்றார் கோட்டாபய முன்னிலை சோசலிஸக்கட்சி சாட்டை!

இத்தனை அதிகாரங்களை கொண்டிருந்த ஜனாதிபதி தாம் மட்டுமே செயற்படுகிறார் எனவும் அதிகாரிகள் செயற்படவில்லை எனக் கூறி மூக்கினால் அழுகிறார் என முன்னிலை சோலிச கட்சியின் தேசிய அமைப்பாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள 12 ஆயிரம் கிலோ லீற்றர் கொள்ளளவை கொண்ட 99 எரிபொருள் குதங்களை இந்தியாவுக்கு கையளிப்பதற்கான உடன்படிக்கை எதிர்வரும் ஒரு மாதத்துக்குள் செய்து கொள்ளப்படும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளமை தொடர்பிலேயே புபுது ஜாகொட மக்கள் இயக்கம் தொடர்பான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஏற்கனவே இந்தியாவின் எரிபொருள் நிறுவனதத்துக்கு திருகோணமலையின் சில எரிபொருள் குதங்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

தற்போதைய நிலையில், பயன்பாட்டுக்கு உகந்ததாகக் கருதப்படும் 15 குதங்களை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கும் 74 குதங்களை இந்தியாவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இணைந்த அமைப்பு ஒன்றுக்கு கையளிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் 51 வீத பங்கு பெற்றோலிய கூட்டுதாபனத்துக்கும் 49 வீத பங்கு இந்தியாவுக்கும் வழங்கப்படும் என அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ள போதும், இணைந்த அமைப்பின் அதிக அதிகாரங்கள் இந்தியாவுக்கே வழங்கப்பட உள்ளன என்று புபுது ஜாகொட குறிப்பிட்டார்.


இதேவேளை, முத்துராஜவெல எரிபொருள் குதம் மற்றும் நாட்டில் உள்ள 100 இற்கு மேற்பட்ட இந்திய எரிபொருள் நிறுவனத்தால் நடத்தப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஆகியவற்றை இணைத்து அமைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் அதிக அதிகாரத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அதேநேரம் மசகு எண்ணெய்யை விட நேரடியாக எரிபொருள்களை இறக்குமதி செய்வது இலாபமானது என்ற அடிப்படையிலேயே சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை மூடியதாக அமைச்சர் உதயகம்மன்பில குறிப்பிட்ட போதும் அமெரிக்காவும் சீனாவும் இலங்கையில் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என புபுது ஜாகொட தெரிவித்தார்.

நடைமுறை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் 20 ஆவது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதிக்கான அதிக அதிகாரங்களைக் கொண்டிருக்கின்ற போதும் அந்த அதிகாரங்கள் நாட்டின் தற்போதைய நிலைமையை சீர்ப்படுத்த பயன்படுத்தப்படவில்லை.

மாறாக நாட்டில் உள்ள சொத்துக்களை விற்பனை செய்வதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. என்று புபுது குற்றம் சுமத்தினார். இத்தனை அதிகாரங்களைக் கொண்டிருந்த ஜனாதிபதி தாம் மட்டுமே செயற்படுகிறார் எனவும் அதிகாரிகள் செயற்படவில்லை எனக் கூறி ' மூக்கினால் அழுகிறார் ' என புபுது ஜாகொட தெரிவித்தார்.

## அமைச்சுகளின் செயலர்களுக்கு விருந்து வைத்தார் ஜனாதிபதி!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு விருந்து ஒன்றை ஏற்பாடு செய்து வழங்கியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த விருந்திற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அவர்களின் மனைவி அல்லது கணவன்மார்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

அதேவேளை திங்கட்கிழமை இரவு இலங்கையின் முன்னணி வர்த்தகர்களான சுமார் 50 பேருக்கு ஜனாதிபதி விருந்தை வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நத்தார் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி இந்த விருந்துகளை ஏற்பாடு செய்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## புலிகளின் தலைவரைவிட மோசமான அழிவை ராஜபக்ஷவினர் நாட்டுக்குச் செய்துள்ளார்கள்!

### சம்பிக்க சாடல்



கொழும்பு, டிசெ. 30

முப்பது ஆண்டுகள் போரில் இருந்து நாட்டை விடுவித்தனர் எனக் கூறிய ராஜபக்ஷவினர், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை விட நாட்டுக்கு மிக மோசமான அழிவைத் தேடி தந்துள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே சம்பிக்க ரணவக்க இதனைக் கூறியுள்ளார். சுனாமி அனர்தத்தை விட மிக மோசமான அனர்த்தம் நாட்டுக்கு செய்யப்பட்டு விட்டது.

அரசாங்கத்திலும் இருக்கும் பலருக்கும், ராஜபக்ஷ வினருக்கு வாக்களித்தவர்களுக்கும் இந்த அழிவை புரிந்துகொண்டுள்ளனர். நாட்டை மிக மோசமான நிதி நெருக்கடி நோக்கி கொண்டு சென்றவர்கள் ராஜபக்ஷ குடும்பத்தினர் என்பது உலகத்துக்குத் தெளிவாகியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவாகி பல மாதங்கள் முக்கிய அமைச்சுக்களுக்கான செயலாளர்களை நியமிக்க முடியாமல் போனது. இதன் மூலம் நாட்டை முன்நோக்கி கொண்டு செல்ல ஜனாதிபதி தயாரில்லை என்பது தெளிவானது எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

## லயன்ஸ் கழகத்துடன் இணைந்து மக்களுக்கு சேவையாற்றத் தயார்!

### மட்டு. மாவட்ட கட்டளைத் தளபதி தெரிவிப்பு





மட்டக்களப்பு, டிசெ. 30

நம் மக்களுக்கு சேவை செய்ய மக்கள் நலன் சார்ந்த லயன்ஸ் கழகத்துடன் இணைந்து பணியாற்ற தயாராகவுள்ளோம் என மட்டக்களப்பு மாவட்ட 231 ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதி பிரிகேடியர் டிலுப பண்டார தெரிவித்தார்.

மட்டக்ளப்பு லயன்ஸ் கழக வலயத் தலைவர் லயன் கே.லோகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வான வாழைச்சேனையில் வசிக்கும் பெண் தலைமை தாங்கும் குடும்பமொன்றுக்கான வீட்டை புனருத்தாரனம் செய்து கையளிக்கும் நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வீடுவாழைச்சேனை 77 'தோட்ஸ் போர் கோப்' அமைப்பு மற்றும் மட்டக்களப்பு லயன்ஸ் கழக உறுப்பினர்களின் நிதி அனுசரணையுடன் இராணுவத்தினரின் கட்டுமானப் பணிகளுடன் புனருத்தாரணம் செய்யப்பட்டு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

நாளந்தம் இடியப்பம் வியாபாரம் செய்து வந்த 4 குடும்ப அங்கத்தவர்களை கொண்டமைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வசித்து வந்த வீடு அதன் கூரை மற்றும் கட்டடத்தின் பல பாகங்கள் சேதமடைந்து வாழ முடியாதபடி காணப்பட்டுள்ளது.

மழை காலங்களில் தரையில் உறங்கி நித்திரை கொள்ள முடியாமல் கதிரையில் இருந்து உறங்கி தங்களது வாழ்க்கையை நடத்தி வந்துள்ளனர்.

இவர்களது அவல நிலமையை அறிந்த 77'தோட்ஸ் போர் கோப்' அமைப்பின் உறுப்பினர்கள் எடுத்த முயற்சியால் இவ்வாறானதொரு நன்மையான செயற்பாடு நடந்தேறியுள்ளது.

## 11 லட்சம் ரூபா நிதிமோசடி பெண்ணொருவர் மறியலில்!

வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொருள்கள் அனுப்பட்டுள்ளன எனவும், அதனைப் பெறுவதற்குப் பணத்தை வைப்பிலிடுமாறு கோரி சுமார் 10 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்தவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

கிளிநொச்சி – திருமுறிகண்டிப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரை கிளிநொச்சியைச் சேர்ந்த மற்றொரு பெண்ணிடம் தொடர்புகொண்டு வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொருள்கள் அனுப்பட்டுள்ளன எனவும், அதனைப் பெறுவதற்குப் பணத்தை வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறும் கூறியுள்ளார்.

இதற்கமைய முறிகண்டியைச் சேர்ந்த பெண் சுமார் 10 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளார்.

இது தொடர்பில் கடந்த செப்ரெம்பர் மாதம் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

அதன்பின் பொலிஸாரின் விசேட நடவடிக்கை மூலம் கொழும்பு தெமட்டகொடப் பகுதியில் வைத்து, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# 3 மாணவர்களுடன் கால்வாயில் விழுந்தது மோட்டார் சைக்கிள்!

## ஒருவர் பலி; இருவர் படுகாயம்

மரமொன்றில் மோதிய மோட்டார் சைக்கிள் கால்வாயில் விழுந்ததில் 13 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன், மேலும் இரு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச்சம்பவம்தம்புள்ளை, களுந்தாவ பரணகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனத் தம்புள்ளை பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தம்புள்ளை, பஹல அரவுல பகுதியைச் சேர்ந்த ரஷ்மிகா தினேஷ் சத்சர ஏகநாயக்க என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த 15 மற்றும் 16 வயதுடைய பாடசாலை மாணவர்கள் இருவரும் தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த மாணவர்கள் நண்பன் ஒருவரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வேளை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

# அரசு மீது மக்கள் கடும் கோபத்தில்!

## சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு ரணில் வலியுறுத்து



நாட்டு மக்கள் அனைவரும் அரசின் மீது கடும் கோபத்தில் இருக்கின்றனர் என்று முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரி வித்தார்.

விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர், நாட்டில் டொலர் பற்றாக்குறை, வேலை வாய்ப்பு இன்மை, விவசாயிகள் பிரச்சினைகள் காணப்படுகின்றன என்றும் கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில், பல நாடுகள் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் பொருளாதார முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, தற்போதைய அரச சர்வதேச நாணய நிதியத்தை நாடி உதவி பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்று வழியை முன்வைக்க வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

எதிர்வரும் புத்தாண்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டால் மக்கள் மத்தியில் கடும் கோபம் ஏற்படும் என்றும், அது அரசைப் பாதிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ராஜபக்ஷக்களால் பேரழிவு!

## சம்பிக்க கடும் தாக்கு

இலங்கையை முப்பது ஆண்டு காலத் போரில் இருந்து விடுவித்ததாகக் கூறிய ராஜபக்ஷவினர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை விட நாட்டுக்கு மிக மோசமான பேரழிவைத் தேடித்தந்துள்ளனர்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்கரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலை அனர்த்தத்தை விட மிக மோசமான அனர்த்தம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது.

அரசில் இருக்கும் பலரும், ராஜபக்ஷவினருக்கு வாக்களித்தவர்களும் இந்த அழிவைப் புரிந்துகொண்டுள்ளனர்.

நாட்டை மிக மோசமான நிதி நெருக்கடி நோக்கிக் கொண்டு சென்றவர்கள் ராஜபக்ஷ குடும்பத்தினர் என்பது உலகத்துக்குத் தெளிவாகியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவாகி பல மாதங்கள் முக்கிய அமைச்சுக்களுக்கான செயலாளர்களை நியமிக்க முடியாமல் போனது.

இதன் மூலம் நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்ல ஜனாதிபதி தயாரில்லை என்பது தெளிவானது - என்றார்.

# நடமாடும் சேவை

நீதி அமைச்சு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் விசேட நடமாடும் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதற்கமைய, வடக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு, எதிர்வரும் ஜனவரி 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில், பொதுமக்களைப் பாதிக்கும் சட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதுடன், நல்லிணக்கம் தொடர்பான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படவுள்ளது.

போதைப்பொருள் பாவனை, காணிப் பிரச்சினைகள் தொடர்பிலும் இந்த நடமாடும் சேவையினூடாக ஆலோசனை வசதிகள் வழங்கப்படும் அதேவேளை வேலைவாய்ப்பைப் பெறுதல் தொடர் பான விழிப்புணர்வு நடவடிக்கையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# போதையில் கடமையிலிருந்த இரு பொலிஸார் பணி நீக்கம்

கடமையின்போது போதையில் காணப்பட்ட கொடிகாமம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரும் நேற்றுமுன்தினம் நண்பகல் கொடிகாமம் பகுதியில் கடமையில் ஈடுபட்டனர். இதன்போது மேற்கொள்ளப்பட்ட விசேட பொலிஸ் பரிசோதனையில் அவர்கள் இருவரும் மதுபோதையில் இருந்தமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து குறித்த இருவரிடமும் சாவகச்சேரி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசேட விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் குற்றம் உறுதியான நிலையில் இருவரும் மறு அறிவித்தல் வரை பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# 2022இல் பெரும் சவாலை எதிர்நோக்கக்கூடும் அரசு

## அமைச்சர் தினேஷ் எச்சரிக்கை

கொரோனா வைரஸ் சூழ் நிலையால் அடுத்த வருடத்தில் அரசு பெரும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும் கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின்தற்போதைய சூழ் நிலையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொடுத்தல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அது தொடர்பில் அரசின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

ஏனைய மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக சிறந்த முகாமைத்துவத்துடனான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.



# புதிய கூட்டணிக்கு திலகர் தீவிர முயற்சி

மலையக அரசியலை மையப்படுத்தி - தேசிய அரசியலையும் இலக்கு வைத்து புதிய தொரு கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில் வாகனம் திலகராஜ் தீவிர கவனம் செலுத்தியுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதன் ஆரம்பக்கட்ட நகர்வாகவே 'மலையக அரசியல் அரங்கம்' எனும் அமைப்பை உருவாக்கியுள்ளார். தற்போது ஆசிரியர்கள், இளைஞர்கள், சிவில் சமூக செயட்பாட்டாளர்கள் என பலதரப்பு சந்திப்புக்களை நடத்தி வருகின்றார்.

இதில் சிலரிடம் மட்டும் தனது அரசியல் பயணம் குறித்து பேசி வருவதுடன், ஏனைய தரப்பிடம் சிவில் சமூக செயல்பாடுகள் குறித்து மட்டும் பேசி வருகின்றார் எனவும் தெரியவருகின்றது.

எவ்வாறாயினும், தேசிய தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து பயணிப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் ஆராய்ந்த வருவதாகத் தெரியவருகின்றது.

எனினும், இந்த முயற்சிகளுக்குத் தேசிய தொழிலாளர் சங்க செயற்பாளர் மத்தியில் கடுமையான எதிர்ப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

எனினும், திலகராஜ் போன்ற படித்த சமூகம் மலையக அரசியலில் அங்கம் வகிப்பது முக்கியமானது என அவருக்கு நெருக்கமான தரப்புக்கள் எதிர்பார்த்துள்ளன.

# ‘ஒரே சட்டம்’ என்ற கொள்கையை எந்த அரசும் அமுல்படுத்தவில்லை!

## ஞானசார தேரர் பெருமிதம்



சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்தவோர் அரசாங்கமும் நாட்டுக்கு ஒரே சட்டம் என்ற கொள்கையை அமுல்படுத்தவில்லை எனவும் அதனை நடைமுறைப் படுத்தத் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக முன்வைத்த யோசனைகள் தொடர்பாகக் கருத்து தெரிவித்த அவர் நிலமின்மை மற்றும் கல்விக்கான வசதிகள் இல்லாமையே மக்களைப் பாதிக்கும் முக்கிய பிரச்சினைகளாகும்.

தேசியக் கொள்கைக்குப் பதிலாக அரசியல் கட்சிகளின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதே நாட்டின் தற்போதைய இக்கட்டான நிலைக்குக் காரணம்;.

அத்துடன் அனைத்து சமூகங்களும் சம உரிமைகளையும் வளர்ச்சி வாய்ப்புகளையும் அனுபவிக்க வேண்டும் என்று மக்கள் நம்புகிறார்கள். இதனைக் கருத்திற் கொண்டு வெளிநாட்டு ஆட்சியாளர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட சட்ட முறைமைக்குப் பதிலாக நாட்டின் தேவைக்கு ஏற்றவாறு புதிய சட்ட முறைமை கொண்டு வரப்பட வேண்டியது அவசியமாகும. நாம் தற்போது ஒரு பேரழிவு நிலையை நோக்கி செல்கிறோம். – என்றார்.

தேசிய சொத்துக்களைப் பாதுகாக்க கடுமையான சட்டங்களை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் தேரர் சுட்டிக்காட்டினார்.

## 3 பிள்ளைகளின் தந்தை பாம்பு தீண்டி யாழில் பலி!

யாழ்ப்பாணம், அனலைதீவு 5 ஆம் வட்டாரப் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தை ஒருவர் பாம்பு தீண்டியதில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலினன்றி உயிரிழந்துள்ளார்.

யாழ். அனலைதீவு 5 ஆம் வட்டாரப் பகுதியைச் சேர்ந்த கார்த்திகேசு ரவீந்திரன் (வயது – 47) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி வீட்டு முற்றத்தில் நின்றிருந்தபோது இனந்தெரியாத வகை பாம்பு ஒன்று அவரை தீண்டியது. அதற்கு சிகிச்சை பெற்று மறுநாள் அவர் வீடு திரும்பியிருந்தார்.

எனினும் கடந்த 26 ஆம் திகதி அவருக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டது. அதனையடுத்து அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## பால் மா வகைகளை அடுத்து திரவப் பாலுக்கும் தட்டுப்பாடு

நாட்டில் பால் மாவுக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ள நிலையில், தற்போது திரவ பாலுக்கான தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதாக தேசிய கால்நடை சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் திரவ பாலை பொதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படும் பொதிகளுக்கு அரசாங்கம் 5 வீத வரி விதித்துள்ளதால், உள்ளூர் திரவ பால் தொழில்துறை பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக தேசிய கால்நடை சபை தெரிவித்துள்ளது.

பால் மா இறக்குமதி செய்யப்படாத சூழலில் உள்ளூர் திரவப் பாலுக்கு வரி விதிக்கப்பட்டமை தொழில்துறையையும் அதன் பொறிமுறைகளையும் பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், திரவப் பாலின் விலையை அதிகரிப்பதற்கு இதுவரை தீர்மானிக்கவில்லை என தேசிய கால்நடை சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில்,டொலர் நெருக்கடி காரணமாக உள்ளூராட்சி பால் நிறுவனங்கள் பயன்படுத்திய பொதிகளும் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதோடு அவற்றில் சில அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதையல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைது

குருணாகல், உடவல்பொல பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் புதையல் தோண்டுவதாகக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பெண்ணொருவரும் உள்ளடங்குவார். கைதான சந்தேக நபர்கள் குருணாகல் மற்றும் ஹற்றன் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அவர்கள் குருணாகல் நிதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமையுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## மக்களின் நிலைப்பாட்டை அறிவதற்கு பிரதேச சபை தேர்தலாவது நடத்துக!

### கயந்த கருணாதிலக வலியுறுத்து

‘கிராமத்துடன் கலந்துரையாடல்’ செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கு இதுவே பொறுத்தமான காலப்பகுதியாகும் என்பதை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நினைவுபடுத்துகின்றோம்.

மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கு பிரதேசசபைத் தேர்தலையேனும் நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நல்லாட்சி அரசாங்கத்தின் எரிபொருள் விலை சூத்திரத்தை அன்று விமர்சித்தவர்கள் இன்று அதனைப் போற்றுகின்றனர். எம்மால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த விலை சூத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்று எரிபொருள் விலை குறைவடைந்திருக்கும்.

ஆனால் தற்போது உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்தாலும் உள்நாட்டில் அதன் விலையை அதிகரிக்கும் வகையிலான விலை சூத்திரமே தற்போதைய அரசாங்கத்தினல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வை வழங்க முடியாத இந்த அரசாங்கம் பால்மா, சமையல் எரிவாயு, சீமெந்து மற்றும் அரிசி என அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் மக்களை வரிசையில் காக்க வைக்கும் நிலைக்கு தள்ளியுள்ளது. அது மாத்திரமின்றி இந்த பொருள்களின் விலைகளும் கட்டுப்பாடுகள் இன்றி சடுதியாக அதிகரித்துச் செல்கின்றன.

இவ்வாறான நெருக்கடிகளால் மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலிலிருந்து அமைச்சர்களும், அதிகாரிகளும் தப்பிச் செல்லவே முயற்சிக்கின்றனர்.

தற்போது ‘ஒரே – நாடு ஒரே சட்டத்திற்கு’ பதிலாக ’ஒரே நாடு – ஒரு வேளை உணவு’ முறைமையே நடைமுறையிலுள்ளது. 2022 இலும் இதே நிலைமை தொடருமா என்ற அச்சத்திலேயே மக்கள் உள்ளனர்.

கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி திட்டத்தை முன்னெடுப்பதற்கு இதுவே சிறந்த சந்தர்ப்பமாகும் என்று ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் நினைவுபடுத்துகின்றோம்.

அடுத்த ஆண்டு மியன்மாரிலிருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த அரிசி சேதன உரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டதா என்று அரசாங்கத்திடம் கேள்வியெழுப்புகின்றோம்.

அரசாங்கம் மக்கள் மத்தியில் தோல்வியடைந்துள்ளமை உணர்ந்து கொண்டுள்ளது. எனவே தான் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகிறது.

மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கு பிரதேசசபைத் தேர்தலையாவது நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தி எந்தவொரு தேர்தலை எதிர்கொள்ளவும் தயாராகவுள்ளது. – என்றார்.

## அக்கரைப்பற்றில் விபத்து 2 வயது குழந்தை சாவு!

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இரண்டு வயது குழந்தையொன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

அக்கரைப்பற்று – கல்முனை பிரதான வீதியின் அட்டாளைச்சேனை பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையிலேயே குறித்த குழந்தை கெப்வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தால் படுகாயமடைந்த குழந்தை அக்கரைப்பற்றது ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

உயிரிழந்த குழந்தையின் சடலம் அக்கரைப்பற்று வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கெப் வாகன சாரதியின் கவன்குறைவால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த பொலிஸார் சாரதியை கைதுசெய்துள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரண்டு ஐரோப்பிய நாடுகளில் தூதரகங்களை மூடும் இலங்கை

வரலாற்றில் முதல் முறையாக சம்பளம் வழங்க டொலர் இல்லாத காரணத்தால், வெளிநாடுகளில் உள்ள மேலும் சில தூதரகங்களை மூட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், போலாந்து, சுவீடன் ஆகிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரங்களை மூட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னரும் அரசாங்கம் சில நாடுகளில் உள்ள தூதரகங்கள் மற்றும் தூதரக பிரதிநிதி அலுவலங்களை மூடியது.

நைஜீரியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் ஜேர்மனி மற்றும் சைப்ரஸில் உள்ள இரண்டு துணை தூதரகங்களையும் மூட அரசாங்கம் தீர்மானித்தது.

இந்த நிலையில் எதிர்காலத்தில் மேலும் பல தூதரகங்களை மூடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## வெளிநாட்டுத் தூதரக பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு டொலர் இல்லை!

வெளிநாட்டு தூதரகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்க டொலர் இல்லை என தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக வெளிநாடுகளின் தூதரகங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு போதியளவு டொலர்கள் இல்லாத நிலைமை உருவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வழமையாக நத்தார் பண்டிகைக்கு முன்னதாக டிசெம்பர் மாத சம்பளம் வழங்கப்படுவது வழமை என்ற போதிலும் இம்முறை அரசாங்கத்துக்கு சம்பளம் வழங்க முடியாத நிலைமை உருவாகியுள்ளது.

இதன் காரணமாக சில தூதரகங்களை மூடுவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தெற்கு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

எனினும், இந்தத் தகவலை அரசாங்கத் தரப்புக்கள் எவையும் உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.12.2021இல் வெளியிடப்பெற்றது.